<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>
<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

MCOP.No: 222/2022 நாள் 11.07.2025

ம.சா.2, திரு.ஏ.சதீஸ்குமார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துக்கொள்ள எனக்கு சாட்சிய சம்மன் வரவில்லை . மனுதாரர் கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் அய்யனார் ஒர்க் சாப்பில் வேலை பார்த்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து சம்மந்தப்பட்ட குற்றவியல் வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. டி.பி.மில்ஸ் ரோடானது 20 அடி அகலமுடைய ரோடு ஆகும். இராஜாபாளையம் பழைய பஸ்டாண்டிற்கு திரும்பும் சாலையானது 10 அடி அகலமுடையது. டி.பி.மில்ஸ் ரோட்டில் விபத்து சமயத்தில்வேகத்தடை எதுவும்இல்லை தற்பொழுது தான் வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது அது எத்தனை என்று எனக்கு தெரியவில்லை. பழைய பஸ்டாண்ட் சாலை திரும்பிய உடன் ஆர்.எஸ். எலும்பு முறிவு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் மருத்துவமனைகளும் வணிக வளாகங்களும் உள்ளது என்றால் சரிதான். டி.பி.மில்ஸ் ரோட்டில் இருந்து மேற்கே திரும்பும் வாகனங்கள் அனைத்தும் வேகம் குறைவாக தான் செல்லும் என்றால் சரிதான். மேற்படி அய்யனார் ஒர்க்ஸாப்பிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையில் சுமார் 15 அடி துூரம் இருக்கும்.அந்த அய்யனார் ஒர்க்ஸாப்பின் உரிமையாளரும் நானும் தான் வேலை பார்க்கிறோம். விபத்து சமயத்தில் ஒர்க்ஸாப்பின் உரிமையாளர் எங்கள் ஒர்க்ஸாப்புக்கு வந்திருந்த காருக்கு அடியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். இந்த விபத்து சமந்தமாக ஒர்க்ஸாப்பின் உரிமையாளரும் நானும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் தவறு உள்ளது என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்த்திருந்தால் காவல் நியைலத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் விபத்தை நான் நேரில்

பார்க்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால்சரியல்ல. விபத்திற்கு காரணம் சைக்கிளில் வந்த நபர் தான் என்றும் எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநர் காரணம் அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றும் நான் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்பதாலும் அது போல் நான் அய்யனார் ஓர்க்ஸாப்பில் வேலை பார்த்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 11th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.